<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 292/2014 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | மாரியப்பன் | நாள் | 26.09.2024 |
| தகப்பனார் பெயர் | ஆறுமுகம் | | |

**<u>வாதிகள் தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>**

19) தாவா சொத்தை வாதியின் தகப்பனார் காளியப்பன் என்பவர் கடந்த 01.10.1980ம் தேதியில் ரத்தனம் மற்றும் அருள்சாமி ஆகியோரிடமிருந்து கிரயம் பெற்றுள்ளார்கள் என்பதை என்னால் மறுக்க இயலுமா என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. கிரயம் பெற்ற தேதியிலிருந்து வாதியின் தகப்பனாரும், வாதியும் சேர்ந்து மேற்படி சொத்தில் விவசாயம் செய்துவருகிறார்கள் என்றால், சரியல்ல.

20) கடந்த 17.09.1985ம் தேதியில் மேற்படி காளியப்பன் இறந்ததற்கு பின்னிட்டு வாரிசு அடிப்படையில், தாவா சொத்தில் வாதிகள் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால், விவசாயம் செய்து வருகிறார்கள். ஆனால், அதற்கு முன்பிருந்தே மேற்படி நிலத்தில் தற்போது வரை குடியிருந்து வருகிறோம். மேற்படி நிலம் ஊருக்கு என்று ஒதுக்கப்பட்ட நிலத்தில் குடியிருந்து வருகிறோம் என்று நான் சொல்கிறேன் என்றால், சரிதான். கடந்த 13.12.2014ம் தேதியில் வாதிகளுக்கு தொந்தரவு செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் நான் தாவா சொத்தில் ஆட்களுடன் நுழைந்து இடையூறு செய்தோம் என்றால், சரியல்ல.

21) தாவா சொத்தில் நாங்கள் அபகரிக்க முயற்சித்தோம் என்பதால்தான், வாதிகள் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால், சரியல்ல. என் சொத்தை அபகரிக்கவேண்டிதான் வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர். நான் சொல்வது தவறானது என்றாலும், வழக்கு தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றாலும், சரியல்ல.

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.